8

# வாழ்வின் சூழ்நிலைகளை மிகச்சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுதல்

## [பிரசங்கி 3; 4]

*சாலொமோன் வாழ்வின் அர்த்தத்தைத் தேடுகையில், உண்மையான மகிழ்ச்சி என்பதே அவரது நிறைவான இலக்காக இருந்தது. அவர் பிரசங்கியின் புத்தகத்தில், மகிழ்ச்சி மற்றும் மனநிறைவைக் கண்டறிவதற்கென்று தமது வாழ்நாள் முழுவதிலும் செய்யப்பட்ட பரிசோதனைகளை மறுகண்ணோட்டமிட்டார். மக்கள் தங்களை மகிழ்ச்சிப்படுத்தவும் நிறைவடைய வைக்கவும் வழக்கமாகச் செய்கின்ற எல்லாவற்றையும் அவர் ஏறக்குறைய முயற்சி செய்தார். அவற்றில் ஏதொன்றும் அவருக்கு நீடிய மகிழ்ச்சியைக் கொண்டுவந்திருக்கவில்லை.*

*சாலொமோன் விவரித்தபடி, உண்மையான மகிழ்ச்சி என்பது அதை ஆராய்ந்து தேடுவதினால் கண்டறியப்படுவதாக இருப்பதில்லை. அவர் தமது ஆராய்ச்சியின் விளைவாக அடைந்த முடிவுகள், நாம் கற்றுக் கொள்ளும்படிக்குத் தேவன் கொடுப்பவைகளாய் இருக்கின்றன. இந்த சத்தியத்தை நடைமுறைப் படுத்துதல் என்பது நாம் நமது வாழ்வை மேன்மையாகப் பயன்படுத்தச் செய்யும். அதிகாரங்கள் 3 மற்றும் 4ல், திருப்திகரமான வாழ்வை நடத்துவதற்கான சில அறிவுறுத்தல்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன. நிச்சயமாகவே நாம் கடினமான வேளைகளைப் பெற்றிருப்போம், ஆனால் அவைகள் நமது மகிழ்ச்சியை அழிக்க வேண்டிய அவசியம் இல்லை. வாழ்வின் சூழ்நிலைகளில் இருந்து மிகச்சிறந்தவற்றை ஏற்படுத்த நாம் கற்றுக்கொண்டால், நம்மைச் சுற்றிலும் வாழ்வின் புயல் கொந்தளிக்கின்ற போது, நாம் மகிழ்ச்சி நிறைந்து, திருப்தியாக, சமாதானநிறைவுடன் மற்றும் அமைதியுடன் நிலைத்து இருக்க முடியும். நம்மைச் சுற்றிலும் புயல் வீசாமல் நாம் தடுக்க இயலாது, ஆனால் அது நமக்குள் வந்து வீசுவதிலிருந்து நாம் விலகி நம்மைக் காத்துக் கொள்ள முடியும்.*

*இது, உண்மையான மகிழ்ச்சி என்பது அறியப்படுகிறது மற்றும் கண்டறியப்படுவதில்லை என்று அர்த்தப்படுகிறதா? இதைப் பற்றி சாலொமோன் என்ன கூறினார் என்று நாம் காண்போம்.*

## உண்மையான மகிழ்ச்சி என்பது வாழ்வின் சூழ்நிலைகளை மிகச்சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதில் இருந்து வருகிறது (3:1-22)

தேவன் எல்லாவற்றிற்கும் ஒரு கால வேளையைத் தமது அருளிரக்கத்தில் ஏற்பாடு செய்கின்றார்: "ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு, வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு" (3:1). இந்த சத்தியத்தை விவரிப்பதற்குப் பதினான்கு ஜோடி எதிர்மறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன:

> பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு,
> நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு,
> கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு,
> இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு,
> அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு,
> புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு,
> கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு,
> கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு,
> தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு,
> தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு,
> காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு,
> கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு,
> மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு,
> சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு,
> யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு,
> சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு (3:2-8).

இவற்றில் பல நிகழ்ச்சிகள் நாம் கொஞ்சமே கட்டுப்பாடு செலுத்தக் கூடிய அல்லது நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. நேரம் வரும்போது பிறப்பு நடக்கிறது, அதுபோலவே இறப்பும் நேரிடுகிறது. காலம் வரும்போது நாம் நடுகின்றோம், நம்மால் பருவகாலங்களைத் துரிதப்படுத்த இயலாது. பயிர் தயாராயிருக்கின்றபோது நாம் அதை அறுவடை செய்கின்றோம். சிலவேளைகளில் நாம் அழுதாக வேண்டும், ஆனால் அதன்பின்பு நாம் மீண்டும் சிரிக்கக் கூடியவர்கள் ஆகிவிடுகின்றோம். கட்டிடங்களை இடித்துப்போட ஒரு காலம் உள்ளது மற்றும் பிறவேளைகளில் நாம் புதிய கட்டிடங்கள் கட்டக்கூடியவர்களாகின்றோம்.

ஒப்பீடானது, பரந்த அளவிலான பாடக்கருத்துக்களைக் கூறிமுடிக்கும் வரை தொடர்ந்து செல்கிறது. அழுவதற்கு ஒரு காலம் உண்டு மற்றும் சிரிப்பதற்கு ஒரு காலம் உண்டு. புலம்புவதற்கு ஒரு காலம் உண்டு, மகிழ்ச்சியால் நடனம் பண்ண ஒரு காலம் உண்டு. ஒரு விவசாயி, தமது நிலத்தில் இருக்கும் கற்களை அகற்றிப்போட விரும்பினால், அவற்றை எறிந்துவிட ஒரு காலம் உண்டு. ஒரு மனிதர் வீடு ஒன்றைக் கட்ட விரும்பினால்

*கற்களைச் சேகரிக்க ஒரு காலம் உண்டு. தையல் ஒன்றைப் பிரித்துக் கிழிக்க ஒரு காலம் உண்டு, மற்றும் ஒரு தையலைத் தைக்க ஒரு காலம் உண்டு. பேசுவதென்பது தக்கதாக இருக்க ஒரு காலம் உண்டு, மற்றும் அமைதியை வேண்டுகிற சூழ்நிலையுள்ள ஒரு காலம் உண்டு. சில விஷயங்கள் வெறுக்கப்பட வேண்டும், அதே வேளையில் மற்ற சில விஷயங்கள் விரும்பப்பட வேண்டும். சிலவேளைகளில் யுத்தம் செய்யவேண்டும்; மற்ற வேளைகளில் சமாதானம் ஒப்பந்தம் செய்யப்படக் கூடும்.*

*இவை யாவும் நமக்கு எதை அர்த்தப்படுத்துகின்றன? "பிரசங்கியார்" நமக்கு எதைக் கூற முயற்சி செய்கின்றார்? சில நிகழ்ச்சிகள் மற்றவற்றைப் பார்க்கிலும் அதிகம் சந்தோஷமானவைகளாக இருக்கின்றன, ஆனால் எல்லா நிகழ்ச்சிகளும் தங்களுக்கே உரிய வேளைகளில்தான் நடை பெறுகின்றன. நல்லதுடன் கெட்டது என்ற வாழ்வின் எல்லாச் சூழ் நிலைகளையும் ஏற்றுக்கொள்ள நாம் கற்க வேண்டும் என்று சாலொமோன் கூறினாரா? அல்லது அவர் வாழ்வுமுழுவதிலும் சமானநிலை மற்றும் எதிர்சமானநிலை ஆகியவற்றை உற்றுக் கவனிப்பதற்காக, நேர்மறைகள் மற்றும் எதிர்மறைகள் ஆகியவற்றை வெறுமனே கண்ணோக்கிக் கொண்டிருந்தாரா? ஒருவேளை அவர் வாழ்க்கையை, "வாக்களிக்க நான் ஏன் கவலைப்படவேண்டும்? நான் எதிராக வாக்களிப்பேன், என் மனைவி ஆதரவாக வாக்களிப்பாள், எங்கள் வாக்குகள் ஒன்றையொன்று நீக்கிப் போட்டுவிடும்" என்று கூறிய ஒரு நபரைப்போல் கண்ணோக்கியிருக் கலாம். ஒருவேளை சாலொமோன், தேவனின்றி வாழ்வின் பெறுதல்கள், தருதல்கள் ஆகியவற்றின் கூட்டுத்தொகை பூஜ்யமாக உள்ளது என்று விவரித்திருக்கலாம்.*

*3:9ல் அவர், "வருத்தப்பட்டுப் பிரயாசப்படுகிறவனுக்கு அதினால் பலன் என்ன?" என்று கேட்டார். வாழ்வு என்பது மனிதன் சிறிதளவே கட்டுப்படுத்த முடிகின்ற நேர்மறையான மற்றும் எதிர்மறையான சுழற்சிகளின் தொடராக உள்ளது. மனிதனுடைய கண்ணோக்கில், சுழற்சி வட்டத்தில் கொண்டு செல்லப்படுதல் என்பது வேளைகளும் பருவங்களும் தங்கள் சுழற்சிகளை முடிப்பதைப்போல் பயனற்றதாகக் காணப்படலாம். நாம் கட்டுப்படுத்த இயலாத சூழ்நிலைகளை நாம் ஏற்றுக்கொண்டு, தேவன் நமக்குக் கொடுத்துள்ள நிகழ்கால வாழ்வை அவருக்கு ஊழியம் செய்வதற்கென்று மிகச்சிறந்த வகையில் பயன்படுத்த வேண்டும்.*

*வாழ்வின் சூழ்நிலைகள் யாவும் ஒரு திட்டத்தின்படி ஒன்றுகூடிச் செயல்படுகின்றன (3:10-15). "பிரசங்கியார்" தேவனுடைய அருளிரக்கத் தினால், மனிதகுலத்தின்மீது இடப்பட்டுள்ள வருத்தமான பெருமுயற்சி யைக் கண்ணோக்கினார். அவர், "மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக்கண்டேன். அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்" என்று எழுதினார் (3:10, 11அ). தேவன் எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகத் திட்டம் இட்டுள்ளார், மற்றும் அவர் நாம் காணக்கூடியவற்றைக் காட்டிலும் அதிகமான நிகழ்ச்சிகளை உணர்ந்தறியும் அறிவை நமது இருதயங்களில் நிலைநாட்டியிருக்கின்றார். நாம், "உலகத்தையும் அவர்கள்*

உள்ளத்திலே வைத்திருக்கிறார், ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும், செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டு பிடியான்'' என்று வாசிக்கின்றோம் (3:11ஆ). நித்தியமான தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்றார் என்று நாம் அறிகின்றோம், ஆயினும் நாம், எந்த ஒரு விஷயத்தையும் தொடக்கத்தில் இருந்து முடிவு வரையிலான அதன் முழுமையான சித்தரிப்பைக் காண இயலாது. காலத்தில் நமது சிறு சட்டக அமைப்பில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை மாத்திரமே நாம் காண இயலும்.

இதிலிருந்து, மனிதன் இந்த பூமியில் வாழுகின்றபோது தனது உழைப்பின் பலன்களை மகிழ்வுடன் அனுபவித்தலே அவனால் செய்ய முடிகின்ற மிகச் சிறந்த செயலாகும் என்று சாலொமோன் முடிவு செய்தார்: "மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைசெய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன். அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்" (3:12, 13). தேவன் நமக்கு இன்றைய நாளின் கொடையை அதன் வாய்ப்புக்கள் மற்றும் அறைகூவல்கள் ஆகியவற்றுடன் கொடுத்திருக்கின்றார். அவர் நாம் வாழவும் வேலைசெய்யவும் கருவிகள் என்ற வகையில் குறிப்பிட்ட சில தாலந்துகளை நமக்குக் கொடுத்திருக்கின்றார். தேவனுடைய திட்ட அமைப்பை நாம் மாற்ற இயலாது; அத்துடன் ஏதொன்றைக் கூட்டவும் அதிலிருந்து எதையாவது குறைக்கவும் நம்மால் முடியாது (3:14). தேவன்மீது நம்பிக்கை வைத்தல் என்பது, நமது வாழ்விற்கான அவரது சித்தமானது நமக்கு கருத்தறிவு எதையும் ஏற்படுத்தாது இருக்கும்போதுகூட, அதை ஏற்றுக்கொள்ளுதல் என்பதாக உள்ளது.

துன்மார்க்கமும் அநியாயமும்கூட ஒரு நோக்கத்திற்கென்று பயன் படுத்தப்படக்கூடும் (3:16-22). சாலொமோன், நியாயத்திற்காகக் கண்ணோக்கிய போது, துன்மார்க்கம் வெற்றிகொண்டிருப்பதைக் கண்டார். நீதி இருக்க வேண்டிய இடத்தில் அக்கிரமம் இருப்பதை அவர் கண்டார். தேவன் ஏற்ற வேளையில் நீதிமான்களையும் துன்மார்க்கரையும் நியாயந் தீர்ப்பார் என்பதை அவர் அறிந்திருந்தார், ஆனால் துன்மார்க்கம் இருக்கும்படி அனுமதிக்கப்படுவது ஏன் என்பதை அவர் அறிய விரும்பினார். பாவம் நிறைந்த வாழ்வை வாழுகின்ற மனிதர்கள், மிருகங்களை விட மேம்பட்டவர்கள் அல்ல என்று காண்பிக்கவே அவர் அதை (துன்மார்க்கத்தை) இருக்கும்படி அனுமதித்துள்ளார் என்று அவர் முடிவு செய்தார்.

மனிதர்கள், தேவனுடைய பிரசன்னத்தை மதிக்காமல், மிருகங்களைப் போல் வாழுகின்றபோது அவர்கள் மிருகங்களைப் போலவே மரிக்கவும் செய்கின்றனர். அவர்கள் மிருகங்களை விட அதிகமான நம்பிக்கையோ அல்லது நோக்கமோ கொண்டிருப்பதில்லை. துன்மார்க்கத்தில் வாழ்கின்ற மனிதன், மிருகங்களைக் காட்டிலும் மேம்பட்டவனாக இருக்க முடியுமா? இவ்விருவருமே மண்ணுக்குத் திரும்புகின்றார்களே.

இது மீண்டுமாக சாலொமோனை, ஒரு மனிதன் தனது வேலையில் மனநிறைவடைந்து வாழ்வில் தனது பங்கை (மகிழ்ச்சியுடன்) ஏற்றுக் கொள்ளுதல் என்பதே அவன் செய்யக்கூடிய மிகச் சிறந்த செயலாக உள்ளது

*என்று முடிவெடுக்கும்படி வழிநடத்திற்று. நாம் இந்த உலகத்தை ஒரே ஒருமுறை மாத்திரமே கடந்து செல்லுகின்றோம். நாம், தேவன் நமக்குக் கொடுத்துள்ளதை, அவர் கொடுத்துள்ளபடியாகப் பயன்படுத்த வேண்டும்.*

## உண்மையான மகிழ்ச்சி என்பது மனித வடிவமைப்பல்ல (4:1-16)

*மனிதன் தனது சுய மனநிறைவின் கட்டமைப்பாளராக இருக்க முடியாது - மிகவும் அதிகமான சூழ்நிலைகள் அதை அழித்துப்போட முடியும். ஒடுக்கப்படுதல் என்பது, மனநிறைவை அடைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகளை அழிக்க முடியும் (4:1-3). உலகத்தில் ஒடுக்கப் பட்டுள்ள மக்கள் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் வருத்தத்தின் கண்ணீரைச் சிந்துகின்றனர், ஆனால் எவரொருவராலும் அவர்களை ஆறுதல்படுத்த இயலாது. அதிகாரம் யாவும் ஒடுக்குபவரின் பக்கமாக உள்ளது. ஒடுக்கப்பட்டவர் தமது வழக்கு நியாயமாகக் கேட்கப்படுதலைப் பெற இயலாது. விடுதலை என்பது எடுத்துப் போடப்பட்டுள்ள நிலையில் உள்ள மக்களைக் காட்டிலும் மரித்தவர்களின் நிலை மேலானது என்று சாலொமோன் கருத்துத் தெரிவித்தார். வசனம் 3, "இவ்விருதிறத்தாருடைய நிலைமையைப் பார்க்கிலும் இன்னும் பிறவாதவனுடைய நிலைமையே வாசி, அவன் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் துர்ச்செய்கைகளைக் காணவில்லையே" என்று கூறுகிறது. ஒடுக்கப்பட்டவர்கள் மனநிறைவடைந்தவர்களாய் இருக்க வேண்டும் என்றால், அந்த மனநிறைவானது அவர்களின் மனநிலையாக (மாத்திரமே) இருக்க வேண்டும் ஏனென்றால், அவர்கள் தங்கள் சூழ்நிலைகளை எவ்வகையிலும் மேம்படுத்திக் கொள்ள இயலாது.*

*கடின உழைப்போ அல்லது சோம்பேறித்தனமோ உண்மையான மகிழ்ச்சியை உண்டாக்க இயலாது (4:4-6). வாழ்வு முழுவதும் கடினமாக உழைக்கும் ஒரு மனிதனைச் சித்தரித்துக் கொள்ளுங்கள். அவன் ஊக்கமும் உற்சாகமும் உடையவனாக இருக்கின்றான். அவன் உயர்ந்த இலக்குகளுக் காகக் கடினமாக உழைத்து அவற்றை அடைகின்றான். அது அவனது மகிழ்ச்சியை உத்தரவாதப் படுத்துகிறதா? இல்லை! அவன் தனது அயலகத்த வர்களால் பொறாமையுடன் பார்க்கப்படுகின்றான், இவ்விதமாக அவனிடத்திலிருந்து மகிழ்ச்சியானது களவாடப்படுகிறது. வெற்றியானது பொறாமையைச் சந்திக்கிறபோது, நண்பர்கள் இழந்து போகப்படுகின்றனர். வெற்றி என்பது நட்புறவை இழத்தலுக்கு மதிப்புடையதாக உள்ளதா?*

*இந்தப் பிரச்சனைக்கு, சோம்பேறித்தனம் என்பது தீர்வாக இருப்ப தில்லை; அதுவும்கூட அழிவைக் கொண்டு வருகிறது. வாழ்வு என்பது மாயையும் மனசஞ்சலம் நிறைந்ததுமாக இருப்பதில் வியப்பெதுவுமில்லை. முடிவுதான் என்ன? சமாதானத்துடன் ஒரு கை நிறையக் கொண்டிருத்தல் என்பது வருத்தத்துடனும் சலிப்புடனும் இரு கைகள் நிறையக் கொண்டிருத் தலைவிட மேன்மையானதாக உள்ளது. இது மதியீனரின் பகுத்தாய்வாக உள்ளதா அல்லது சாலொமோனின் முடிவாக உள்ளதா? எவ்வகையிலும்,*

நமக்குப் பாடமானது ஒரேமாதிரியாகவே உள்ளது. சந்தோஷத்தைப் பெறுவதற்காக நாம் உழைத்தாலும் அல்லது சோம்பேறித்தனமாக உட்கார்ந்து அதற்காகக் காத்திருந்தாலும் நாம் அதை ஆதாயப்படுத்திக் கொள்ள இயலாது. அதிகமான உழைப்போ அல்லது சோம்பேறித்தனமோ விரும்பத்தக்கது அல்ல. தவறான இடங்களில் நமது வலியுறுத்தத்தை வைக்கக் காரணமாகும் எல்லைகளை நாம் தவிர்க்க வேண்டும். நாம், வெற்றியைப் பற்றிக் கவலைப்படாமல், அன்றாடம் தேவனுக்காக மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் வாழ வேண்டும். நாம் இரு கைகள் நிறையக் கொண்டிருப்போமா, ஒரு கை நிறையக் கொண்டிருப்போமா அல்லது ஒன்றுமில்லாதிருப்போமா என்பது பற்றி நாம் கவலைப்படக்கூடாது!

பேராசை என்பது மனநிறைவை அழிக்கிறது (4:7-12). தான் கொண்டிருப்பவற்றில் ஒருக்காலும் திருப்தியடைந்திராத இன்னொரு மனிதரைச் சித்தரித்துப் பாருங்கள். இவன் இன்னும் அதிகமான உலகப் பொருட்களைப் பெறும்படிக்கு, தனிமைப்படுத்தப்பட்ட தனியான வாழ்வை வாழும் அளவுக்கு அதிக வேலை செய்கின்றான். இவனுக்குச் சகோதரனோ, பிள்ளையோ அல்லது நண்பனோ இருப்பதில்லை. இவன் எல்லா நேரத்திலும் வேலை செய்து கொண்டே இருக்கின்றான். இவை எல்லாவற்றையும் இவன் யாருக்காகச் செய்கின்றான்? இவன் அதை மகிழ்வுடன் அனுபவிப்பதற்குப் போதிய அளவு நிற்பதில்லை. இவன் இதைப் பகிர்ந்து கொள்வதற்குக் குடும்பத்தைக் கொண்டிருப்பதில்லை. இவன் இதைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை.

சுயநலமாக வாழுதல் என்பது மதியீனமாக வாழுதலாக உள்ளது. மனிதன் தனிமையாய் இருப்பது அவனுக்கு நல்லதல்ல. அந்த உண்மையை முதலில் அறிவித்தவர் தேவன்தாம். (ஆதி. 2:18). ஒருவராய் இருப்பதைக் காட்டிலும் இருவராய் இருத்தல் நல்லது என்பதற்கு, சாலொமோன் நான்கு காரணங்களைக் கொடுத்தார்: (1) அவர்கள் தங்கள் உழைப்பின் பலனைப் பகிர்ந்து கொள்ள முடியும். (2) அவர்களில் ஒருவர் விழுகின்றபோது, இன்னொருவர் அவரைத் தூக்கிவிட முடியும்; ஒருவர் தனியாக விழுந்தார் என்றால், அவர் இடர்ப்பாட்டில் இருக்கின்றார். (3) குளிரான இரவில் இருவர் ஒரே போர்வைக்குள்ளிருந்தால், அவர்கள் ஒருவரை ஒருவர் வெதுவெதுப்பாக்கிக் கொள்ளமுடியும். (4) ஒருவர் தனியாக நின்றால், அவர் இருவராய் நிற்பவர்களைக் காட்டிலும் அதிகமாகத் தாக்கப்படுவதற்கும் தோல்வியடையச் செய்யப்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. ஒரு கயிறு சுலபத்தில் அறுந்துபோனாலும், "முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" (4:12).

அதிகாரம்கூட மனநிறைவை உறுதிப்படுத்துவதில்லை (4:13-16). சிலர் அதிகாரமுள்ள பதவிகளை நாடுகின்றனர், அது அவர்களுக்கு மனநிறைவைக் கொண்டுவரும் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆலோசனையைக் கவனிக்காத வயதுமுதிர்ந்த அரசனாக இருப்பதைக் காட்டிலும், ஞானமுள்ள இளைஞனாக, ஏழையாக இருத்தல் மேண்மையானது. இப்படிப்பட்ட இளைஞன், ஏழையாக இருந்தாலும் சிறைச்சாலையில் இருந்து புறப்பட்டு வந்து அரசனாக முடியும். அவனுக்குப் பின்பாக ஆயிரக் கணக்கில் மக்கள் தொடர்ந்து வந்து அவன் அரியணையை அடைய

*உதவுவார்கள். இதே இளைஞன் சற்றுக்காலத்திற்கு, அதிகாரம் நிறைந்தவனாகவும் புகழ்மிக்க தலைவனாகவும் முடியும். பின்பு, இரண்டாம் தலைமுறை அவனுக்குக்கீழ் வளருகின்றபோது, இவன் தனது புகழ்ச்சியை இழக்கக் கூடும். இவனது இடத்தில் இன்னொரு இளைஞன் அரியணையில் அமரக்கூடும். அதிகாரமும் புகழும் வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொண்டு வருவதில்லை. இது யாவும் சுழற்காற்றைத் துரத்துவது போல் உள்ளது.*

## *முடிவுரை*

*நாம் இயேசுவை அறிய முடியும் என்பதால் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்! சாலொமோனின் ஆய்வுக்கட்டுரையானது, இரட்சகர் நமக்குத் தேவை என்பதை வலியுறுத்துகிறது. நம்மையே நாம் ஒருக்காலும் மகிழ்ச்சியானவர்களாக்க இயலாது. நம்மை நாமே மகிழ்ச்சிப்படுத்த இயலாததைக் காட்டிலும் அதிகமாக, நம்மையே நாம் இரட்சித்துகொள்ள இயலாது. அந்த தேவைக்கு பதிலளிக்க இயேசுவே வந்தார். வாழ்வின் மாயையானது கிறிஸ்துவுக்குள் மறைந்துபோகிறது. இயேசு ஒருக்காலும் மாயையைப் பற்றிப் பேசியதில்லை. அவர் நம்பிக்கை, மகிழ்ச்சி, அன்பு, மற்றும் சமாதானம் ஆகியவற்றைப் பற்றியே பேசினார். நாம் ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியும் அந்த ஜீவன் பரிபூரணமடையும்படியுமே அவர் வந்தார் (யோவா. 10:10).*

*இயேசுவின் மீது உங்கள் நம்பிக்கையை வையுங்கள். உங்களுக்காக அவர் கொண்டுள்ள ஜீவ மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்வில் அவர் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்களைக் கண்டு நீங்கள் மெய்சிலிர்த்துப்போவீர்கள்.*